சிவமயம்

News1
aperin Ceylon
P. M. G. NO. H. A
69/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ௫௬] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஹு ஆனி மீ ௩௧ உ (1947 ஜுலை 15 செவ்வாய்க்கிழமை) [இல உ௬

## பிரார்த்தனை

வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் வினைக்கேட னென்பாய் போல
இனையனு னென்றுன்னை யறிவித் தென்னை
யாட்கொண்டெம் பிரானுனைக் கிரும்பின் பாவை
அனையநான் பாடேனின் றாடே னந்தோ
அலறிடே னுலறிடே னாவி சோரேன்
முனைவனே முறையோநா னான வாறு
முடிவறியேன் முதலந்த மாயி னானே.

—மணிவாசகர்.

## பொலிசார் கடமை

### ஸ்ரீ மகாதேவாவின் புத்திமதி

சென்றவாரம் பொலிஸ் பயிற்சிக் கழகத்தை உள்நாட்டு மந்திரி பார்வையிட்டு, பொலிசார் ஊரவருடன் ஒத்துழைக்கவேண்டிய அவசியத்தைவற்புறுத்தினர். பொலிசாரா யுள்ளவர்கள், தாங்கள் ஊரவர்களிலும் பார்க்க ஏதோ உயர்ந்த பிறவிகள் என்று எண்ணிக்கொள்ளாமல், 'ருலா ஹ மி' மனோபாவம் காட்டாமல், ஊரிலே அமைதியை, நிலைநாட்ட ஊரவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கூறினர்.

இன்னும் இலங்கையரால், தம் கருமங்களைத் திறம்பட நடாத்த முடியாது என்ற அபவாதம் இதுவரை ஓர் சிலராற் கூறப்பட்டுவந்தது. இப்போதுள்ள பொலிஸ் தலைவர் ஓர் இலங்கையர்; அவரின் தலைமையின் கீழ் பொலிஸ்பகுதி மிகவும் முன்னேறியிருப்பது, இந்த அபவாதம் ஆதாரமற்றது என்பதைக் காட்டுகிறது என்றும் ஸ்ரீ மகாதேவா குறிப்பிட்டார்.

ஸ்ரீ மகாதேவா, பொலிஸ்பயிற்சி நிலையத்து அதிகாரியான மிஸ்ரர் சிட்னி சொயிஸாவின் திறமையையும் சேவையையும் பாராட்டிப் பேசினர்.

## கதிர்காமம்

### துட்டகைமுனுவினுற் கட்டப்பட்டதாம்

கதிர்காம ஸ்தலத்தை எந்த ஓர் சாதியார் பொறுப்பிலும் விடக்கூடாது. இப்போதுபோல, அது எப்போதும் "பப்ளிக்ட்ரஸ்ரி" என்னும் அரசாங்கப் பராபரிப்புக் காரரால் பரிபாலிக்கப்படல் வேண்டும் என்று சென்ற வியாழக்கிழமை அநுராதபுரத்தில் நிகழ்ந்த புராதன சின்னப் பாதுகாப்புச் சங்கத்தில் ஓர் தீர்மானம் நிறைவேறியது

மிஸ்ரர் எஸ. னிஸ் அப்புகாமி என்பவர் இத்தீர்மானத்தை எடுத்தாளும்போது, சிங்கள மன்னனாகிய துட்டகைமுனு நிறுவிய இந்தப் புநித தேவாலயத்தை 2400 வருஷங்களுக்குப் பிறகு, அது தமக்குவேண்டும் என்று யாரும் கேட்டால் அது மௌட்டீகத்தின்பாற்பட்டதென்று கூறினர். இன்னும் இப்போது கதிர்காமப் பரிபாலனம் செவ்வனே நடைபெறவும், சர்வதேச ஸ்தாபனமாயுள்ள விவேகானந்தசபை, கதிர்காமத்தை ஹிந்துக்கள் வசம் ஒப்புவிக்க வேண்டும் என்று தீர்மானித்திருப்பது ஓர் துக்ககரமானவிஷயம் என்றும் தெரிவித்தார்.

## ஜம்பம் பலிக்கவில்லை

### எனவே ஜின்னு பணிந்தார்

இப்போது இந்தியாவில் உள்ள இடைக்கால அரசாங்கத்தைக் கலைத்துவிட்டு, இன்னோர் அரசாங்கத்தை ஆகஸ்டுமாதம் 15ம் திகதி வரைக்கும் மாத்திரம் நிறுவ இராஜப்பிரதிநிதி நிச்சயித்தார். அவருடையகேள்விப்படி பண்டிதர் நேருவும் அவருடைய சகாக்களும் தங்கள் இராஜினாமாப் பத்திரங்களைச் சமர்ப்பித்தனர். ஆனால் லீக்கரோ, அப்படி விலக முடியாது என்றும், ஆகஸ்டுமாதம் 15ம் திகதிவரை இப்படியே இருந்தாலென்ன என்றும்விதண்டாவாதம் பேசினராம். உடனே பவுன்ற்பேற்றன் பிரபு ஜின்னாவை அழைப்பித்து மிகவும் கோபத்துடன், லீக்கர் உடனே இராஜினாமாச் செய்யவேண்டும் இல்லையேல் தமது யதேச்சாதிகாரத்தைப் பிரயோகித்து அவர்களை வெளியே தள்ளப்போவதாகப் பட்டவர்த்தனமாகத் தெரிவித்தார். இதனைக் கேட்டதும் ஜின்னாசாய்பு, திங்கட்கிழமையன்று லீக் அங்கத்தவர்களின் ராஜினாமாவை அனுப்பும்படி செய்வதாகக் கூறினர்.

இப்போதுள்ள இடைக்கால அரசாங்கம் கலைக்கப்பட்டதும், இதே அங்கத்தவர்களைக் கொண்ட தற்காலிக மந்திரசபை அமைக்கப்படும், இந்த மந்திரசபையும் ஜுலைமாதம் 20ம் திகதி வரைதான் இருக்கும். அதற்குப்பின், இராஜப்பிரதிநிதி லீக் அங்கத்தவர்களை மட்டும் விலகும்படி அறிவிக்கப்போகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு நெறி

### அதுவே உண்மைச் சமயம்

[ ஸ்ரீ இராமக்கிருஷ்ண விஜயம் ]

மக்களாய்ப்பிறந்தவர்க்கு மூவகைக் கடமைகள் உள்ளன; அவை யாவன: தமக்குரிய கடமை, பிறர்க்குரிய கடமை, ஈசனுக்குரிய கடமை என்னும் மூன்றும். ஒவ்வொருவனும் தனக்குச் செய்யவேண்டிய கடமையாவது, பிறவாமையைப்பெறுதலே; பிறர்க்குச் செய்யவேண்டிய கடமையாவது, தம்மைப்போன்று பிறரும் பிறவாநிலையை அடையும்படிச்செய்ய முயலுதலே; ஈசனுக்குச் செய்ய வேண்டிய கடமையாவது, அவனை மகிழ்விக்கும் பணியில் ஈடுபடுதலே. இம்மூன்று கடமைகளையும் வெவ்வேறாகச் செய்யத் தொடங்குவார் பலர்; ஆயினும் ஒரே தொழிலில் ஈடுபடும்போது இம்மூவகைக் கடமைகளையும் நிறைவேற்றுதல் அறிவுடைமையாகும்: அத்தன்மை வாய்ந்த தொழிலை அறிந்து பின்பற்றுதலே அறிவுடைமையின் பயனாகும்.

முற்காலத்திலே பல தீரர் பிறவிப் பயனை (பிறவா நிலையை அடைதல்) அடையும்பொருட்டு உலகவாழ்க்கையைத் துறந்து கானகம்சென்று, தவமும் தியானமும் பயின்றனர்; பலநாள் முயன்று தமக்குள்ளே திகழும் பரம்பொருளைக் கண்டு பேரின்பம் பெற்று முத்தியடைந்தனர். தன்னை வெல்பவன் தாணி முழுவதையும் வெல்பவனாவான்: தன்னை உயர்த்தும் அளவிற்கு ஒருவன் உலகத்தையும் (தான் அறியாமலும், பிறர் உணராமலும்) திருத்துவது உண்மையே. எவ்வாறெனில், உபதேசத்தைவிட அதிகமாக ஒருவனது ஒழுக்கமே பிறரை உயர்த்தும். ஒழுக்கத்தின் வலிமையே உபதேசத்திற்கு வலிமையாகின்றது. இன்னும் ஈசனைச் சதா நினைந்திருக்க முயலுதல் அவனை மகிழ்விக்கும் பணியாகின்றது. ஆக, ஒருவழியாகப் பார்க்கும்போது, காட்டிலே தனியிடத்தமர்ந்து யோகம் பழகியவரும், மூவகைக்கடமைகளையும் செய்தவராவர். இந்நெறியே முற்கால இருடியர் பற்றிய ஞான நெறியாகும்.

பிற்காலத்திலே பெரியார்பலர் பிறவிக்கடலை நீந்தி முத்திக் கரைசேரும் பொருட்டு ஈசனது திருவடியையடைய முயன்றனர். 'தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம்' (அடியார்கள் தாம் விரும்பும் வடிவம் எதுவோ அதை) உடையவன் ஈசன் ஆதலின் அழகும் தூய்மையும் மிக்க இடங்களிலே ஈசனுக்குக் கோயில்களையமைத்து அங்கே தாம் விரும்பும் வடிவங்களிலே அவனை எழுந்தருளப்பண்ணுவித்தனர். ஈசன் அன்பு வடிவமானவன். அன்பரிடத்தே பைத்தியம் கொண்டவன், அன்பையே உணவாகக் கொண்டு மகிழ்பவன்; ஆதலின் அவனது திருக்கோயிலுக்குச்சென்று மெழுகிட்டும் அலகிட்டும் மலரிட்டும் இன்னும் பலவாறாகவும் அவனை வழிபட்டனர் அன்போடு மக்கள் செய்யும் தொண்டுகளால் மகிழ்ந்து, ஈசன் அவர்களைக் கடைத்தேற்றுவான். தனியிடங்களையும் நாடு மலைகளையும் நாடாது, அடியார்கள் தம்மைப்போன்று ஈடுபடும் அன்பர்களோடு கூடி வாழ்வர்; ஈசனை நினைக்கும்போதும், அவனது பெருமையைப் பேசும்போதும், அவனுக்குப் பணி செய்யும்போதும் பல அன்பர்கள், கூடியிருந்து மனங் குளிர்ந்து பொழுதுபோக்குவர். பிற அடியார்களையும் வணங்குவார். கண்ணபிரான் திரௌபதியின் பாத்திரத்திலிருந்த ஒருதுளி உணவை உண்டு மகிழ்ந்தபோது, துருவாசரும் அவரோடு வந்த முனிவர்பலரும் வயிறார உண்டு மகிழ்ச்சியுற்றனரல்லவா? ஆக, ஈசனுக்குச் செய்யும் பணிவிடைகளின் மூலமாகத் தமக்குரிய கடமையையும் பிறமக்கட்குச் செய்யவேண்டிய கடமையையும் நிறைவேற்றினர் பெரியார். இதுவே பிற்கால அன்பர் பற்றிய பக்தி நெறியாகும்.

இனித் தற்காலத்திற்கு இயைந்த முத்திநெறி யாது என்பதையும் ஆராயவேண்டும். முற்கூறிய இருவகை நெறிகளும் மக்களைப் பேரின்பக் கரைக்குச் செலுத்தின; பாரதநாட்டிற்குப் பெருமையை அளித்தன உலகத்தாரனைவரும் பிறவித்துயரை ஒழிக்கவேண்டி, வந்து பிறக்க ஆசைப்படும் ஞான வளநாடென அதைப் போற்றுமாறு செய்தன. ஆயினும், இன்று பாரதநாடு பரிதவிக்கும் நிலையிலுள்ளது வெளிப்படை. பசியும், பிணியும் பகையும் ஒழியாது வாழும் நாடு இதைப்போன்றது வேறில்லை. ஜனசமூகம் இங்கே ஒற்றுமையின்மையாலும் கல்வியின்மையாலும் நாகரிகமின்மையாலும் அடிமைத்தன்மையாலும் வலியிழந்து சீர்குன்றிக்கெடைந்து வருகின்றது. பிறமதத்தினர் நமது மக்களைப் பறித்துத் தம் மதத்தினராக்குகின்றனர். இந்நிலையில் நமக்கும் பிறர்க்கும் ஈசனுக்கும் செய்யவேண்டிய மூவகைக் கடமைகள் எவையெவை என்பதைத் தெளியவேண்டும்: எந்த ஒரு கடமையை நிறைவேற்றுதல் மூலமாக மற்ற இரண்டையும் நிறைவேற்றக்கூடும் என்பதையும் ஆராயவேண்டும் வாய்வேதாந்தமே இன்று முழங்கி வருகின்றது. ஆன்ம சக்தியோ அருகி வருகின்றது. நமது நாடு உய்வடைய ஞானபலமே வேண்டும். ஞானவாழ்க்கை வலுக்கவேண்டும். ஆனால்நமது நாடு பாழடைந்து வரும்போது, நாம் நாட்டை விட்டுக் காட்டுக்கு ஓடித் தவம்செய்ய முயல்லாமா? அல்லது, 'எல்லாம் ஈசன் செயல்' என்று கூறி, கைகட்டி வாய்பொத்திக் கண்மூடி மௌனியாகிக் கோயிலிலே ஈசன்முன்பு தியானத்தில்அமரலாமா? அல்லது கோயிலை மெழுகியும் சுத்தம் செய்தும், மாலை கட்டியும் திருவிளக்கேற்றியும் பொழுதுபோக்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஹூ
ஆனிமீ ௩௧௨ செவ்வாய்க்கிழமை

## ஆடு கோழி பலியிடுதல்

இந்நாட்டிலே சிலவினுஞ்சில கோயில்களில் ஆடுகோழி வெட்டிப் பலியிடுதலாகிய சமயவிரோதமான தீச்செயல் காலந்தோறுங் குறைந்து வருகிறதென்பதைச் சிந்திக்கும்போது நம் சமயத்தவர்கள் சந்தோஷ முறுமலிருத்தல் முடியாது. புலையுங் கொலையுந் தவிராத மக்கள் சிலர் இந்நாட்டிலே பல வருடங்களுக்கு முந்திச் சில கோயில்களிற் செய்துவந்ததாகிய இந்தச் சிவகாருண்யமற்ற சமயத் துரோகமான கொலையைத் தடுத்தற்கு முயற்சி செய்தவர்கள், இற்றைக்கு இருபத்தைந்து முப்பது வருடங்கட்கு முன்னர் சிறந்த சைவத் தொண்டாற்றிய யாழ்ப்பாணம் மத்திய சைவவாலிப சங்கத்தினரேயாவர்; "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி — எல்லாவுயிருந் தொழும்" என்ற வாழ்த்து அச் சங்கத்தினருக்கே உரியதாகும்; அக் காலத்திலே தொல்புரம் "வளக்கம்பராய்" அம்மன் கோவில்போன்ற சில கோயில்களிலே நேர்ந்து வந்ததாகிய இந்த ஆடு கோழி பலியிடும் அக்கிரமத்தை அறவே ஒழிப்பதற்கு அச் சங்கத்தார் பட்டபாடு கொஞ்சமல்ல வெனலாம்; அவர்கள் தத்தம் தொண்டினை மனப்பூர்வமாகச் செய்தமையினால் அத்தொண்டு அநுகூலமுற்று வரலாயிற்று.

இமமத்திய சங்கத்தாரின் தூய தொண்டினைப் பின்பற்றிக் காலகதியிற் பல ஊர்களில் சைவ இளைஞர் சங்கங்கள் ஸ்தாபிக்கப்படலாயின; இச் சங்கங்கள் வாயிலாகவும், இச்சங்கத்தவர்கள் அமைத்துள்ள வாசிகசாலை வாயிலாகவும் காலந்தோறும் இந்நாட்டிலே பல நன்மைகள் விளைகின்றன வென்பது கண்கூடே; இவ்விளைஞர் சங்கங்களுட் பல, தத்தம் ஊர்களிலும் கிராமங்களிலும் சமய விஷயமாகவும் சாதியின் விருத்தி விஷயமாகவும் பல்லாற்ருனும் உழைத்து வருகிருர்களென்பதை நாம் அறிவேம்; இப்படியான சங்கத்தைச் சேர்ந்த இளைஞர் சிலர் தங் கிராமத்திலுள்ள கோயில்கள் சிலவற்றில் தாசியர் நடனத்தையும், இன்னுஞ்சிலவினுஞ் சில கோயில்களில்நேர்ந்து வரும்ஆடுகோழி வெட்டுதலாகிய அநர்த்தமான செயலையும் தங்கள் இடையரு முயற்சியினல் அறவேயொழித்து விட்டமையையும், சில கோயில்களில் இத்தீமைகளை ஒழித்துவிட முயன்று வருதலையும் நாம் நேரில் அறிவேம்; வாலிபர்கள் இப்படியான சற்கருமங்களில் ஈடுபட்டு இடையரு முயற்சியோடு உழைத்துவர, அக்கிராமங்களிலுள்ள மூத்தவர்கள், "கொடிறும் பேதையுங் கொண்டது விடா" என்ற பான்மையாக, திருவிழாக் காலத்திலே தாசியர் நடனம் வேண்டுந்தான், வருடத்திற்கொருமுறை ஆடு கோழி வெட்ட வேண்டுந்தான் என்று பிடிவாதமாக நிற்றலையும் நாம் அறிவேம்; இம் மூத்தவர்கள் எப்பொழுது கதி யடைவார்களோ யாமறியேம்.

அதிகமாக ஆடு கோழிகள் வெட்டப்பட்டு வந்த கோயில்களுள் அராலியம்மன் கோவிலும் ஒன்ருயிருந்தது; சென்ற சில வருடந் தொடக்கமாக அக் கோயிலின், இப்பொழுதுள்ள அதிகாரியின் காருண்ய சிந்தையினற் ஆடு கோழிகள் வெட்டப்படவொண்ணுதெனத் தடுக்கப்பட்டது; ஆடு கோழிகளின் வாழ்த்தும் எம்முடைய வாழ்த்தும் அவ்வதிகாரிக்கு உரியனவாகுக. இந்த யாழ்ப்பாணப் பகுதியிலே யுள்ள இன்னும் மூன்று நான்கு கோயில்களில் நாமறிந்தவரையில் ஆடு கோழி பலியிடப்படுகின்றன; அவை யாவன உரும்பராய் காட்டுவைரவர் கோயில், சுன்னுகம் ஐயனர் கோயில், தெல்லிப்பழையில் உள்ள ஒரு வைரவர் கோயில், இந்த யாழ்ப்பாணப் பட்டினத்தின்மத்தியிலே யுள்ளகோட்டை முனியப்பர்கோயில்கள்; இவைகளோடு,நாமறியாதசிலகோவில்களிலும் இத் தீச்செயல் நடத்தல் கூடும்; குறிக்கப்பட்ட கோவில்களுக்குச் சமீபமாக இருக்கும் அபிமானிகளும், சைவ இளைஞர் சங்கத்தினரும் சிவகாருண்யம் பூண்ட அன்பர்களும் குறித்த கோவில்களில் ஆடு கோழி பலியிடாது தடுத்தற்கு ஆகவேண்டிய முயற்சிகளைச் செய்வரேல் அவர்களுக்குப் பெரும் புண்ணியங் கிடைக்கும்.

"கோல்லா விரதம்
குவலயமெல்லா மோங்க
எல்லார்க்குஞ் சோல்லுவதேன்
இச்சை பராபரமே"

## சமாதானம் வந்துவிட்டதா?

பாதகண்டத்தை இரண்டு பிரிவாக்கி, பாகிஸ்தானை முஸ்லீம்மான்களுக்கும், ஹிந்துஸ்தானத்தை இந்துக்களுக்கும் கொடுக்க நிச்சயிக்கும் அதே தினத்தில் அந்த நாட்டிலே வகுப்புக் கலகங்களும் சமூகச் சண்டைகளும் தாமாகநின்றுவிடும்என்று ஜின்னுசாய்புநாளிதுவரை தப்பட்டம் அடித்துவந்தார். அவர் விரும்பியபடி, ஆரியநாடு துண்டாடப்பட்டது. பாகிஸ்தான் உருவாகிவிட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக அந்தப் பாகிஸ்தான் ராஜ்யத்துக்குத் தாமே அதிபதியாக இருக்கவேண்டும் என்று ஜின்னுசாய்பு தமக்குத் தாமே மகுடமும்சூட்டிக்கொண்டார். இவ்வளவுடன் இந்தியாவில் வகுப்புக் கலகங்கள் ஒழிந்திருக்கவேண்டும். அப்படி வகுப்புக் கலகங்கள் ஒழிந்துவிட்டனவா? சமூகச்சண்டைகள் நின்றுவிட்டனவா? பலாத்காரச் செயல்கள் மறைந்துவிட்டனவா? நேர்மாருக இப்போதுதான் அவைமும்முரமாக, அதுவும், ஹிந்துக்கள் பெரும்பான்மையினராக வதியும் மாகாணங்களில் தலைவிரித்தாடுகின்றன. சென்ற வாரம் கல்கத்தாவில், முஸ்லிம் பொலிஸ் உத்தியோகத்தருடைய அநுசரணையில்நிகழ்ந்த அக்கிரமங்கள் உலகில் சீர்திருந்திய [illegible] அருவருப்பைக் கொடுக்கக்கூடியனவாகும். பாஞ்சாலத்திலும் இதே கதைதான்.

தலையில்லா முண்டம்போன்ற பாகிஸ்தானத்துடன் ஜின்னுவும் அவருடைய சகாக்களும் திருப்தியடைந்துவிடவில்லை. இந்தியாவுக்குள்ளே சதா கலகங்களை விளைத்து, ஹிந்துக்கள் அரசியல் நிருவாகம செய்ய அருகதையற்றவர் என்பதை அகில உலகுக்கும் காட்டுவதே ஜின்னுவின் பிரதான நோக்கம். ஹிந்துஸ்தானத்துக்குள்ளேயே ஓர்பாகிஸ்தான் இடக்கத்தை ஆக்கி, அந்நாட்டை மேன்மேலும் துண்டாடுவது இரண்டாவது நோக்கம். பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் இதுவரை, இந்தியாவில அதிகாரம் செலுத்திய படியினல், ஜின்னுவின் ஜம்பம் ஓரளவுக்குப் பலித்துவிட்டது என்பது உண்மை ஆனல், ஆகஸ்டுமாதம் 15ந் திகதி தாரத்தில் இல்லை என்பதனையும், வீரப்பிரதாப சிங்கன், சிவாஜி முதலாம் ஹிந்து வீரசிங்கங்களின் இரத்தம் இன்றும் ஹிந்துக்களுடைய நாம்பில் ஓடுகின்றதுதான் என்பதனை ஹிந்துக்களால் இப்போதும் எப்போதும்காட்டமுடியும் என்பதையும் ஜின்னுசாய்புவும், அவரைச் சேர்ந்த கிராதகர் கூட்டமும் எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரம் உணர்கின்றனரோ, அவ்வளவுக் கவ்வளவு அவர்களுக்கே நன்மைபயக்கும். ஹிந்துக்கள் இதுவரை பொறுமையாகத்தான இருந்திருக்கிருர்கள். அது பயங்கொள்ளித்தனததால் அல்ல, அகிம்சாமூர்த்தியான சபர்பதி முனிவன, அரைநிர்வாணப் பக்கிரியின் ஆணையினல் என்பதையும் ஜின்னுசேஷ்டி உணருமாக. ஈராக், ஈரான், அரேபியா, எகிப்து, முதலாம் உலக முஸ்லீம் நாடுகளின் பக்கப்பலம் தனக்கு உண்டுஎன்னும் மமதையினல், ஜின்னு இன்று சர்வாதிகாரத்தர்பார் புரிந்து அக்கிரமங்கள் விளைக்க ஏதுவாக இருக்கிருர். ஹிட்லர், முசோலினி முதலாய சர்வாதிகாரிகளும் இவ்வாறுதான் பக்கப்பலத்தை நம்பி, தாம அதோகதி யடைந்தது மல்லாமல், தமது மக்களையும் ஈற்றில் அதோகதிக்குள்ளாக்கினர். இந்தப் பாடத்தினை பாகிஸ்தான் முஸ்லீம்கள் உணர்ந்து, ஜின்னுவின் கெடுபிடியினின்றும் தம்மைத் தப்புவித்துக் கொள்ளுவராக.

# சமரச மனேபாவம்

## ஜின்னு திருவாய் மலர்கிருர்!

சென்ற ஞாயிற்றுக்கிழமை பாகிஸ்தான் "கவர்னர் ஜெனறல்" ஜின்னு ஓர் பத்திரிகைக்காரர் மகாநாட்டைக் கூட்டி, பாகிஸ்தானில் சிறுபான்மை வகுப்பினர் எவ்வாறு நடத்தப்படுவர் என்பது பற்றி விபரித்தார். அவர் கூறியதாவது:

பாகிஸ்தானிலே, சிறுபான்மை மக்களுடைய மதஅநுட்டானம், கலாசாரம், உயிர், சொத்துக்கள் என்பவற்றிற்கு எவ்வித பங்கமும் ஏற்படாதபடி பாதுகாப்புக்கள் அளிக்கப்படும். அவர்கள் பாகிஸ்தான் பிரஜைகள் என்ற தன்மையில், எந்த விதத்திலும், முஸ்லீம்களைப் போல வித்தியாச மின்றி நடத்தப்படுவர். பாகிஸ்தானில் வசிக்கும் சிறுபான்மையினரும், தங்கள் பிரஜைகள் என்ற உண்மையை முதலில் உணர்ந்து தங்கள் கடமையைச் சரிவரச் செய்து வரவேண்டும். அவர்கள் பாகிஸ்தான்மீது உண்மையான விசுவாச முடையவர்களாக இருத்தல் வேண்டும்.

"இந்தியாவி லுள்ள முஸ்லீம் சிறுபான்மையினரும், இவ்விதமே சகல பாதுகாப்புக்களும் அளிக்கப்படுவர் என்று எண்ணுகிறேன். பாகிஸ்தான் அல்லது இந்தியச் சமஷ்டியைச் சேர்ந்த சிறுபான்மையினர் தாங்கள் சம்பந்தப்பட்ட அரசாங்கத்துக்கு, விசுவாச மற்றவர்களாகவும், அந்த அரசாங்கத்தின் நடைவடிக்கைகளைக் கேடுக்கச் சூழ்ச்சி புரிபவர்களாகவும் இருந்தால், அவர்கள் அங்கே வைத்துக் கொள்ளப்படமாட்டார்கள்."

## சேனநாயக்க 'சர்க்கஸ்'

### தகநாயக்காவின் வர்ணனை

இப்போது 11வருஷ காலமாக இலங்கையைப் பரிபாலனம் செய்த அரசாங்க சபை, பலவித மிருகங்களும், பறவைகளும், நீர்வாழ் ஜெந்துக்களும் உள்ள ஓர் 'சர்க்கஸ்' காட்சியைப் போன்றது என்று மிஸ்ரர் டபிள்யூ. தகநாயக்கா சென்ற வாரம் வாதுவையில் நிகழ்ந்த ஓர் சமசமாஜக் கூட்டத்தில் வர்ணித்தார்.

இந்த 'சர்க்கஸில்' மனேஜர் மிஸ்ரர். சேனநாயக்கா; மிஸரர். கோத்தலாவலை தான் புலி; மிஸ்ரர். பண்டாரநாயக்கா விலாங்கு; தான் கழுது; மிஸரர். உபாலி பத்துவந்துடாவையும் மிஸரர். சுஸந்தா பொன்ஸேக்காவும் ஆந்தைகள் என்று மிஸரர். தகநாயக்கா கூறினர்.

# குறிப்புக்கள்

## எதிர்காலம்

"எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ருங்கு இலங்கை பொல்ஷெவிக் லெனின் கட்சியைச் சேர்ந்த டக்ரர் கொல்வின் ஆர். டீ சில்வா இலங்கையின் எதிர்காலநிலைமை சம்பந்தமாக விடுத்துள்ள எச்சரிக்கையை நாமும் ஆதரிக்கவேண்டியவர்களாகின்ருேம். இந்நாட்டை எதிர்நோக்கும் கேவல நிலைமையை எவ்வாறு போக்கலாம் என்பதில் இன்றுநாம் எல்லாரும்சிரத்தை எடுக்கவேண்டும். ஆனல் சமத்துவம் என்ற பெயரால், இலங்கை மக்களின் ஆசாரா நுட்டானங்களைக் கெடுத்து, நாஸ்திகக்கொள்கைகளைப் பரப்புவதாலும், எங்கள் கலை, நாகரீகம் என்பவற்றுக் கொவ்வாத விபரீத கொள்கைகளை மக்களிடையே புகுத்துவதாலும், இந்த எதிர்கால நெருக்கடியை நாம் ஒருபோதும் போக்க முடியாது என்பதை டக்ரர் சில்வா போன்ருர்க்கு நாம் தெரிவிக்க விரும்புகிருேம். எங்கள் நாட்டுக்கு வரவிருக்கும் பொருளாதார நெருக்கடியைத் தவிர்க்கவேண்டுமானல், இலங்கையில் உள்ள ஜனத்தலைவர்கள் என்[illegible] தமக்குள்ளே [illegible] வேண்டும். நாட்டின் நன்மைக்கான வழிவகைகளை ஒருங்கு சேர்ந்து முடிவுசெய்ய வேண்டும். அவற்றை நடைமுறையில் எவ்வாறு கொண்டுவரலாம் என்பதனை ஒருங்கு சேர்ந்து நிச்சயித்தல்வேண்டும். இதுதான் ஈடேறும் மார்க்கம் இவற்றைவிடுத்து, இங்கொரு கட்சி, அங்கொரு கட்சியாகப் பிரிந்து நின்று, பொதுஜனங்களுக்கிடையே வேற்றுமையைப் புகுத்தி, விபரீதக்கொள்கைகளைப் பிரசாரம் செய்வதால் நாம் கருதிய கருமம் கைகூடமாட்டாது.

***

## சேர்ச்சில் மனேபாவம்

"எங்களுடன் சேராதவர்கள் எங்களுக்கு விரோதமானவர்கள்" என்று யுத்தகாலத்தில் பிரிட்டிஷ் பிரதமராகவிருந்த மிஸ்ரர் வின்ஸ்டன் சேர்ச்சில் தம்முடைய யுத்த முயற்சியில் ஒத்துழைக்க மறுத்த இந்தியக் காங்கிரஸ வாதிகளையும் மகாத்மாகாந்தியையும் குறை சொன்னர்: இந்தியக் காங்கிரஸ் யுத்த முயற்சியில் ஈடுபட மறுத்தபோதிலும், அது அச்சு வல்லரசுகளுக்கு விரோதமான மனேபாவத்துடனேயே இருந்தது சேர்ச்சில கோஷ்டியின் சாமானைக் கண்களுக்குப் புலப்படவில்லை. சேர்ச்சிலின்

தொடர்ச்சி 5ம்பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய அரசியல்

# பட்டம் சூட்டினர்

## ஜின்னுவின் அரசியல் திருகுதாளம்

### முதல் கவர்னர் ஜெனரல்

ஆகஸ்டுமாதம் 15ம் திகதியுடன், இந்தியா, பாகிஸ்தான் என்னும் இரு கண்டங்களும் சுதந்திரம்பெற்றவுடன், பாகிஸ்தானுக்குக் கவர்னர் ஜெனரலாக ஜனுப் மகமதலி ஜின்னுவும், இந்தியாவுக்குக் கவர்னர் ஜெனரலாக, மவுன்ற்பேற்றன் பிரபுவும் இருப்பர் என்று இப்போது ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருக்கிறது ஜனுப் ஜின்னு தமக்குத்தாமேபட்டம்சூட்டி நியமித்துபிரிட்டிஷ் அரசாங்கத்துக்குத்தெரிவித்தார். அதனைப் பிரிட்டிஷ் அரசாங்கம் அங்கீகரித்துவிட்டது. முஸல்மான்களுக்குள், இந்தப்பதவியை வகிப்பதற்குத் தக்க வேறும் ஆட்கள் இல்லாதபடியால், ஜின்னுவே இந்தப் பதவியைத் தாம் ஏற்றுக்கொண்டார் என்றும் ஓர் செய்தி கூறுகிறது. எது எப்படியிருந்தபோதிலும், ஓர் சுதந்திர முஸ்லிம் அரசாங்கத்திலேதான் தலைமைப்பதவி வகிக்கவேண்டுமென்ற ஜின்னு எண்ணியிருந்தமை கைகூடிவிட்டது. அவர் இதுவரை ஆற்றிவந்த கருமங்கள் யாவும் அந்த ஓரே ஒரு லட்சியத்துக்காகத்தான் என்றும் பேசிக்கொள்ளப்படுகிறது ஜின்னு இப்படித் தம்மைத்தாமே தெரிந்தமை இவரது சித்தசுத்த சம்பந்தமாகப் பலவித சந்தேகங்களை இப்போது கிளப்பியிருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இந்தப் பதவியை ஜின்னு விரும்பியிருக்கக்கூடாது என்றும் இது, அவரது அரசியல் ஞான சூன்யத்தைக் காட்டுகிறது என்றும் பிரிட்டிஷ் பத்திரிகைகள் மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகின்றன

●

### இந்தியாவின் கவர்னர் ஜெனரல்

தமது அதிகாரத்தைக் காட்டுதற்காக ஜின்னு தம்மைத் தாமே கவர்னர் ஜெனரலாக நியமித்தபோதிலும், அத்தகைய மனோபாவம், காங்கிரசுக்கு உதிக்கவில்லை சுதந்திர இந்தியாவில், ஜனநாயக முறையைப் பின்பற்றும் எவர் கவர்னர்ஜெனரலாக இருந்தாலும் பாதகமில்லை என்ற கொள்கையுடைய காங்கிரஸ், இப்போதுள்ளபடி மவுன்ற்பேற்றன்பிரபுவே கவர்னர்ஜெனரலாக விருக்கலாம் என்று சிபாரிசு செய்துவிட்டது. ஜின்னு தம்மைத் தாமே அப்படி கவர்னர் ஜெனரலாக நியமித்ததைப்பற்றி மகாத்மாகாந்தி தம் பிரார்த்தனைக்கூட்டத்திலும் குறிப்பிட்டார். பாகிஸ்தான் அரசாங்கத்திலே, ஜின்னுவும், அவருடைய சகாக்களும், சிறுபான்மையினரையும், தேசீய முஸ்லீம்களையும் எவ்வாறு நடத்துகிறார் என்பதை இந்தியா கூர்ந்து அவதானித்து வரும் என்று மகாத்மா குறிப்பிட்டார்.

●

### பாகப்பிரிவினை

இந்தியாவின் ராணுவம், கடற்படை, ஆகாயப்படை என்பவற்றை பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையே பாகப்பிரிவினை செய்யும் வேலை இப்போது ஓரளவுக்கு முடிந்துவிட்டது. இதற்கென நியமிக்கப்பட்டநிருவாகசபை, இப்போது பிரிட்டிஷ் இந்தியாவின் மொத்த ராணுவம் கடற்படை ஆகாசப்படை என்பவற்றை மூன்றுகப் பிரித்து, ஒரு பங்கு பாகிஸ்தானுக்கும், இரண்டுபங்கு இந்தியாவுக்கும் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறது.

●

### சமஸ்தானங்களும் அரசியல் நிர்மாணசபையும்

நேற்று இந்திய அரசியல் நிர்மாண சபைக் கூட்டம் மீண்டும் ஆரம்பமாயது இந்தியாவில் உள்ள மாகாணங்களில், ஏற்கெனவே தெரிந்தெடுக்கப்பட்டு, பின் பகிஷ்காரம் செய்த முஸ்லிம்லீக் பிரதிநிதிகளும் அரசியல் நிர்மாணசபையிற் பங்குபற்றினர். சுதேச சமஸ்தானங்களுக்கென 93 பிரதிநிதிகள் இருக்க ஏற்பாடு செய்யப்பட்டது அதாவது 10 லட்சம் ஜனங்களுக்கு ஒரு பிரதிநிதியாக, 9 கோடியே 30 லட்சம் சமஸ்தானப் பிரஜைகள் சார்பாக 93 பிரதிநிதிகள், இச்சபையில பங்குபற்றவேண்டியிருந்தது. இவர்களில் 60 பேர் நேற்றையக் கூட்டத்திற் பங்குபற்றினர். மீதி 33 பேர்தான் வரவில்லை அந்த 33 பேரில் ஹைதரபாத் பிரதிநிதிகள் 16 பேர்; திருவிதாங்கூர்ப் பிரதிநிதிகள் 6 பேர்; காஸ்மீரத்துப் பிரதிநிதிகள் 4 பேர்; போபால்ப் பிரதிநிதி ஒருவர். ஆக 27 பேர் இவர்கள்போக மீதி 6 பேரும், அநேகமாக பாகிஸ்தான் பிராந்தியத்துக்குச் சமீபமாகவுள்ள சமஸ்தானப் பிரதிநிதிகள். இவர்கள் பாகிஸ்தான் அரசியல் நிர்மாணசபையிற் சேருவர். திருவாங்கூரும், ஹைதராபாத்தும் சுதந்திரமாக இருக்கப்போகின்றனவாம்; போபால் மதில்மேற் பூனைபோல் இருக்கிறது காஸ்மீரமும் அப்படியே. எது எப்படியிருந்தபோதிலும், 93 பேரில் 60 பேர் இந்தியச் சமஷ்டியிற் சேர்ந்திருப்பது ஓர் குறிக்கத்தக்க விஷயமாகும்.

●

### படேலின் வேண்டுகோள்

சமஸ்தானங்களுக்கு சர்தார் வல்லபாய் படேல் ஓர் உருக்கமான வேண்டுகோள் விடுத்திருக்கிறார். சமஸ்தானங்கள் இந்திய சமஷ்டியிற் சேர்வதால், அவற்றின் சுதந்திரம் எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டாதென்றும், நேர்மாருக, அவற்றுக்கு அதிகபலம் ஏற்படும் என்றும், இந்தியா உலகிலே சிறந்த இராச்சியமாக விளங்கும் என்றும், ஓர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். இந்த வேண்டுகோளை பீக்கானீர் மகாராஜாவும் ஆதரித்து ஓர் அறிக்கைவிட்டிருக்கிறார்.

●

### ஜின்னுவின் அகம்பாவம்

சிந்துமாகாணத்தில உள்ள சிறுபான்மையினர், ஜனுப் ஜின்னுவைக் கண்டு, தமக்கு வரவிருக்கும் குறைகளையும், அவற்றை நிவிர்த்தி செய்யும் மார்க்கங்களையும்பற்றிக் கூற விரும்புவதாகக் கடித மூலம் அறிவித்தனர். இப்படியான தூதுக் கோஷ்டிகளைச் சந்தித்து, சிறுபான்மையினர் சம்பந்தமான பிரச்சினைகளைப் பேசத் தமக்கு இப்போது சாவகாசம் இல்லை என்று ஜின்னு சாய்பு தெரிவித்துவிட்டாராம் என்னே அகம்பாவம்!

●

### நிஸாமின் இரகசிய ஆயத்தம்

ஹைதராபாத் நிஸாம், தமது ஹிந்துப் பிரஜைகள் தமக்கெதிராகக் கிளர்ச்சி செய்து இந்தியச் சமஷ்டியிற் சேர முன்வந்தால், அதனை அடக்குதற்கு இப்போதே ஆயத்தங்கள் துரிதமாகச் செய்து வருகின்றார் என்று ஓர் செய்தி கூறுகிறது வடமேற் கெல்லைப்புறத்தில் உள்ள பட்டாணியரில் 2000 பேரை, தமது இராணுவத்திற் சேர்க்க நிஸாம் ஏற்பாடுசெய்துவிட்டார். இவர்களைக்கொண்டு, ஹைதராபாத்தின் நிரந்தரப் பிரஜைகளான ஹிந்துக்களை இந்த முஸலீம் மன்னர் அடக்கப்போகிறார!

●

### ஸில்கெற் வாக்கெடுப்பு

அசாமில் உள்ள ஸில்ஹெற்பகுதி பாகிஸ்தானுடன் சேர்வதா அன்ரு என்பதைப்பற்றிய பொதுஜன வாக்கெடுப்பு சென்றவாரம் நிகழ்த்தப்பட்டது. அதன் முடிவு இப்போது வெளியாகியிருக்கிறது. அப்பகுதியிலுள்ள மக்கள் (முஸ்லீம்கள்) பெரும்பான்மையினர் பாகிஸ்தானுடன் சேரவேண்டுமென்றே சம்மதம் கொடுத்துவிட்டனர். எனவே, அப்பகுதி இனிப் பாகிஸ்தானுடன் இணைக்கப்படும்.

●

### லீக்கரின் சதி

இந்திய அரசாங்கத்திலே, போக்குவரத்துப் பகுதியில் அப்துல் ரூப் நிஷ்டர் என்னும் முஸ்லிம் லீக்கர் மந்திரியாக இருக்கிறார். இந்தியா பிரிக்கப்பட்டுவிடுவதற்கிடையில், அங்கேயுள்ள டெலிபோன் தந்திச் சாதனங்களுக்குரிய பொருள்களை அப்படியே பாகிஸ்தானுக்கு அசுற்றச் சதியாலோசனை செய்தார் என்று கல்கத்தா அமிர்தபஸார்ப் பத்திரிகையின் விசேஷ நிருபர் தெரிவிக்கிறார் இதுமாத்திரமல்ல, அஸாம் மாகாணமும் காஸ்மீரமும் உலக நாடுகளுடன் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ளாமல் இருக்கவும் இந்த லீக் முழுமூன் ஓர் திட்டம் வகுத்து வைத்திருந்தனராம்.

அப்துல் ரூப் நிஷ்டரின் சதியாலோசனை கண்டுபிடிக்கப்பட்டு முளையிலேயே கிள்ளி எறியப்பட்டதாம்.

## கிளெறிக்கற் பரீட்சை

### சித்தியடைந்த தமிழர் விபரம்

சென்ற ஜனவரி மாதம் நிகழ்ந்த கிளெறிக்கற் பரீட்சையிற் சித்திபெய்திய தமிழ் மக்கள் நாமாவலி வருமாறு:

G அமிர்தலிங்கம், P அம்பலவாணர், V. அரசரத்தினம், P. R. அரசநிலை, A அரியரத்தினம், K அரிநேசருகம், C. பாலசிங்கம், S. பாலசுப்பிரமணியம், T. R. காசிநாதன். K செல்லையா, S. செல்லையா V செல்லையா, M. P. எம்மானுவேல், S ஞானப்பிரகாசம், K. கனகசுந்தரம், T குணரத்தினம். S. ஜெயராஜா, K. கணபதிப்பிள்ளை, S. கந்தசாமி, J. S. கருணரத்தினம், C. கதிர்காமத்தம்பி, S. கதிரவேல், T. கேதீஸ்வரநாதன், T குலசேகரம், C. மகேசன், M. மயில்வாகனம், S. மார்க்கண்டு, D. S. A. மாசிலாமணி, T. S. மயில்வாகனம், K நடராசா, M நடராசா R, நடராசா, U. நடேசன், T. நடேசபிள்ளை, A. நம்பியாரூரன். P T. நவரத்தினம், R. நவரத்தினம் R. நவரத்தினராசா, K. பத்மநாதன், K. பரமநாதன், B. A. G L. பத்மநாதன், P. பத்மநாதன், T. பொன்னுத்துரை, P. G. பொன்னம்பலம், S. பொன்னம்பலம், S. பொன்னுஸ்வாமி. E. புலேந்திரன் R. ராஜலிங்கம், S. இராஜரத்தினம், V. ராஜசேகரம், K. ராமசாமி, T. ராசதுரை, K. ராசதுரை, N. ராசையா, M சண்முகநாதன், S. சண்முகசுந்தரம், T. C. செபமாலை S. செல்லையா, B R. R. சின்னையா K. சிவகுருநாதன் S. சிவராமலிங்கம், P. சிவசுப்பிரமணியம், S. சுப்பிரமணியம், S. தம்பிராஜா, P. தர்மலிங்கம், K தேவசிகாமணி S தில்லைராஜா, V. திருநாவுக்கரசு, S துரைநாயகம். N. துரைராசா, L V. திலரரத்தினம், A. துரைரத்தினசிங்கம், S. விஜயநாதன், K. வைரமுத்து, A வாமதேவன், N. வரதராசன், V. வீரசுந்தரம், T. விசயேந்திரம், A. K. விஸ்வநாத ஐயர், S லோகநாதன்.

## அணுக்குண்டுகள்

### அவற்றை அழிக்கவேண்டும்

உலகிலேயுள்ள அணுக்குண்டுகள் யாவற்றையும் நாசமாக்கவேண்டும். அதன்மூலம்தான் உலக சமாதானம் ஏற்படும் என்று ஐக்கியதேச ஸ்தாபனத்து அணுச்சக்தி மேற்பார்வைச் சபையில் ருஷியப் பிரதிநிதி குரோம்கோ கொண்டுவந்த தீர்மானத்தைச் சகலதேசப் பிரதிநிதிகளும் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுவிட்டனர்.

அணுக்குண்டுகளை அழிக்கக்கூடாது ஆனல் அவற்றை ஓர் தனி நாட்டின் பொறுப்பிலும் வைத்திருக்கக்கூடாது. ஐக்கியதேச ஸ்தாபனப் பிரமாணங்களை மீறி மற்றும் நாடுகள்மீது ஆக்கிரமிக்கும் வல்லரசுகள்மீது இந்த அணுக்குண்டுகளைப் பிரயோகிக்கவும், ஐக்கியதேச ஸ்தாபனத்துக்கு அதிகாரம் இருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் உலகிலே ஆக்கிரமிப்புக்கள் நிகழா என்று ஈராக்தேசப் பிரதிநிதி கூறினர்.

ருஷியாவின் தீர்மானத்துக்கு இங்கிலாந்து ஆஸதிரேலியா, சீனம், கனடா பிரேஸில் முதலிய நாடுகள் ஆதரவளித்தன,

## அரிசி - சீனி

### இலங்கையின் நிலைமை

இந்த ஆண்டின் முதல் ஆறு மாதத்திலும் இலங்கைக்கு 110,000 தொன் அரிசி கிடைத்திருக்கிறது அடுத்த 6 மாதங்களுக்கும் இன்னும் 160,000 தொன் அரிசி கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வருடத்தில் இலங்கைக்கு 85,000 தொன் சீனி ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது அதில், 35,000 தொன் சீனி, இதுவரை கிடைத்து விட்டது. மீதி 50,000 தொன் சீனியும் இந்த ஆண்டு முடிவதற்கிடையில் வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைக்கு மாதந்தோறும் சராசரியாக 25,000 தொன் மா கிடைத்துக்கொண்டிருக்கிறது.

## செய்தித் திரட்டு

நேர்பாளம் இப்போது சிலகாலமாகப் பூரண சுதந்திர நாடாகிவிட்டமையினால், பிரிட்டிஷ் அரசாங்கமும், நேர்பாள அரசாங்கமும் இராஜரீகத் தூதுவரை மாற்றிக்கொள்ள நிச்சயித்துவிட்டன.

0 0 0

இந்த ஆண்டு ஜூன்மாதம் வரை உள்ளூர் நெல்வாங்கும் திட்டத்தின்படி 1,765,629 புசல் நெல் அரசாங்கத்துக்குக் கிடைத்திருக்கிறது. இதிற் பெரும்பாகம் கீழ்மாகாணம் கல்முனைப் பகுதியில் இருந்தே பெறப்பட்டதாம்.

0 0 0

தமிழ்க்காங்கிரஸ் ஆதரவில் சென்ற சனிக்கிழமை பின்னேரம் கரையூரில் ஓர் பெரிய கூட்டம் கூடியது ஸ்ரீ ஜீ. ஜீ. பொன்னம்பலம் முதலாம் காங்கிரஸ் பிரமுகர்கள் தமிழ் மக்கள், மேற்படி காங்கிரசை ஆதரிக்கவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்திப் பேசினர்.

0 0 0

யாழ்ப்பாணம் முஸ்லிம் தெரு மகமதியா பாடசாலை மண்டபத்தில், ஐக்கிய தேசியக்கட்சியின் கொள்கைகளை விளக்கி சேர் மகமத் மக்கான் மரக்காயர் அவர்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஓர் பிரசாரணம் புரிந்தார். ஐ. தே. கட்சிப் பிரமுகர்களான கௌரவ ஸ்ரீ அ. மகாதேவா, ஜனுப் எஸ். எம். அபூபக்கர், ஜனுப் எஸ். எம். அப்துல்காதர் (நகர சபை அங்கத்தவர்) ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியை முஸ்லீம்கள் ஆதரிக்கவேண்டியதின் அவசியத்தை வற்புறுத்திப் பேசினர்.

0 0 0

இன்னும் 40 லட்சம் யார் துணிகளை ஜப்பானிலிருந்து பெற இலங்கையரசாங்கம் ஒழுங்கு செய்திருக்கிறது.

0 0 0

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் சென்ற சனிக்கிழமை ஸ்தாபகர் தினம் சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி அவர்கள் தலைமையிற் கொண்டாடப்பட்டது.

0 0 0

கொக்குவிலைச் சேர்ந்த சின்னவன் என்பவன் துப்பாக்கிக் காயங்கள் பட்டு சென்றவாரம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் இறந்தான். சிலர் இவ்விஷயமாகச் சிறையாக்கப்பட்டிருக்கின்றனர்.

## சமசமாஜிகள் நிலை

### அங்கத்துவம் பெறுவரா?

இலங்கைச் சமதர்மக்கட்சித் தலைவரான டக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்ஹ வருகிற பாராளுமன்றத் தேர்தலில் அபேட்சகராக நிற்க முடியாது. இன்னும் அக்கட்சியைச் சேர்ந்த மிஸ்ரர் எம் ஜி மெண்டிஸ் என்பவரும் கொழும்புப் பொலிஸ் நீதிஸ்தலத்தில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, 10000 ரூபாப் பிணையில் வெளியில் நிற்கிறார். சமசமாஜக்கட்சித் தலைவர்களில் ஒருவராய மிஸ்ரர் பிலிப் குணவர்த்தன கொழும்பு தெற்குப் பொலிஸ் நீதிபதியினல் 3 மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார். அவரும் இப்போது பிணையில் நின்று தமக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு எதிராக உயர்தர நீதிமன்றத்திற்கு மநுச் செய்வார் என்று தெரிகிறது. இன்னும் அக்கட்சியைச் சேர்ந்த ஜனுப் அபுபக்கர் என்பவர்மீதும் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில், சமசமாஜிகளும், சமதர்மிகளும் முன்னர் நாம் எதிர்பார்த்த அளவுக்குப் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் பெறுவரோ என்பது ஆசங்கைக்கு இடமாக இருக்கிறது. இவர்கள், தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனையை ஆட்சேபித்து மநுச்செய்திருப்பதால், அதற்கு முடிவு வருமளவும், பாராளுமன்றத் தேர்தற்கான நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கவோ, தேர்தலில் ஈடுபடவோ, ஈடுபட்டு வெற்றிபெற்ருல், பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கவோ தடையில்லை. ஆனல் இவர்கள்மீது விதிக்கப்பட்டுள்ள தண்டனை ஊர்ஜிதம் செய்யப்படுமானல், அவர்கள் இப்போதுள்ள அரசியற் சட்டத்தின்படி பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்க முடியாது.

முந்தி அவிசாவலைப் பகுதிக்கு என முன்வந்த மிஸ்ரர் பிலிப் குணவர்த்தன இப்போது கோட்டைத் தொகுதிக்கு முன்வர, அவிசாவலைத் தொகுதிக்கு, அவருடைய இளையசகோதரர் மிஸ்ரர் ரூபர்ட் குணவர்த்தன அபேட்சகராக முன்வந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதம்

# தமிழர் கடமை

இவ்விலங்கை மிகக் கூடிய சீக்கிரத்திற் சுதந்திரத்தை அடையப்போகின்றது. இவ்விலங்கையிலுள்ள தமிழ்ச்சாகியத்தார் தங்கள் பங்கு எவ்வளவென்று தெரியாமற் றவிக்கின்றனர். இந்நிலைமையில் எங்களிடத்தில் ஒற்றுமையில்லை. ஒற்றுமையை நிலைநாட்டக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் யாராயின் இனி வரப்போகும் பாராளுமன்றத்து அங்கத்தினராய் வர அபேட்சித்து நிற்கும் பெரியார்களே. இப்பெரியார்கள் யாவரும் ஒருங்குகூடித் தங்களுக்குள் ஓர் தலைவரைத் தெரிந்து அவருக்கு வழிகாட்டிகளாகப் பலரைத்தெரிவு செய்து, இவர்கள் யாவருமே வடமாகாணம், கீழ்மாகாணம் ஆகிய இருபெரும் மாகாணங்களிலுள்ள இடங்களுக்குச் செலவில்லாது பிரதிநிதிகளை அனுப்பலாமே. தமிழ்ச் சாகியத்தாரில் ஆங்கிலப் பாஷையில் பாண்டித்தியமடைந்த நியாயவாதிகளும் ஆசிரியர்களுமே இவ்விஷயத்தை அலசி ஆராய்ந்து அறிய வல்லுநர். இவர்களின் அபிப்பிராயத்தில் பெரும்பகுதியாளருடன் சேர்ந்து நிற்பதால் நன்மை வருமோ, அன்றேல் தனித்துநின்றால் நன்மை வருமோ என்று யோசனைசெய்து கூடிய அங்கத்தினர் எது நன்மை செய்யுமென்று செய்த தீர்மானமே மிக நன்மையைத்தருமென்று நினைக்க இடமிருக்கிறது. நாங்கள் எமக்கிடையே வேற்றுமை கொள்வதால், அரசியல் சம்பந்தமான நன்மைகளை இதர சாதியினர் அனுபவிக்க, தமிழர்கள் வாளாவிருந்து, சிலரின் மோகவலையில் சிக்கி, பெரும்பகுதியானோர் கஷ்டப்படவிடுவது எவ்வளவு புத்தியீனம். ஆகையினால் பாராளுமன்றத்து அங்கத்தினராய் வரவிருக்கும் அபேட்சகர்களே! பெரியோர்களே! தமிழர்களே! நீங்கள் வீட்டுக்குவீடாய்த் திரியவேண்டாம். பொய்ப்பிரசாரம் செய்யாதீர்கள். மற்றையோரை உங்கள் உங்கள் நயத்தைக்குறித்து ஏமாற்றாதீர்கள். நீங்கள் அரும்பெரும் பணத்தைச் செலவழித்துச் சம்பாதித்த கல்வியின் பயன் இதுதானா? இனிமேல் எங்கள் தமிழுலகத்துக் கச்சாணிபோல் இருக்கும் நமது குழந்தைகளையும் இவ்வழியில் தானா வழிகாட்ட வந்திருக்கிறீர்கள்.

நீங்கள் பணம் செலவழித்துப் பெற்ற கல்வியின் பயன் இதுவாயின், ஓர் சதமும் செலவழியாது கொடுக்கும் உங்கள் இலவசக் கல்வியின் பயன் எப்படியென்று யோசித்துப்பாருங்கள். உங்கள் ஒற்றுமையீனத்தின் நிமித்தம் எத்தனையோபேர் புதிய புதிய முறையில் பொய் சொல்லத் தொடங்கியிருக்கிறார்கள்? புதிய குடிகாரர் எத்தனைபேர்? தினுசுதினுசாய் ஏமாற்றுஞ் செய்யப் படிக்கிற பிள்ளைகள் எத்தனைபேர்? ஏமாற்றுகிறவர்கள் எத்தனைபேர்? வீண் செலவு செய்யத் தொடங்குவோர் எத்தனைபேர்? இன்னும் எத்தனை புதிய புதிய முறைகளைக் கையாண்டு தங்கள்தங்கள் கட்சிகளை வெல்லும் உபாயத்தைப் பிரயோகிப்போர் எத்தனைபேர்.

நீங்கள் இங்கிலாந்துக் சடுத்திருக்கும் அயர்லாந்து சுயராச்சியம் அடைந்த சரித்திரத்தை வாசிக்கவில்லையா? அல்லாமலும் உங்கள் முன்னிலையில்செய்கையில் செய்துகாட்டும் இந்தியப் பெரியார்களை நீங்கள் பார்க்கவில்லையா, அவர்கள் தங்கள் நாட்டைங்கள் வழிகாட்டுகிறது போலத்தான் வழிகாட்டுகிறீர்களா? இருந்தாற்போற் பெய்தமழைக்கு எழும்பிய புற்றுக்காளான்கள்போல பலபல சங்கங்களும், பலபல நோக்கங்களையும் கொண்டு கிளம்பி, உங்கள் உங்கள் நோக்கங்கள் நிறைவேறினவுடன் நீர் எங்கிருப்பீர்?

எங்கள் சாகித்தியத்தில் முன்பின் எவருமில்லாது வழிகாட்டியாயிருந்த கௌரவ சேர். பொன். இராமநாதத் துரையின் தமிழ் அபிமானம் வெறும் பேச்சில இருந்ததா? அன்றேல் செய்கை முறையில் காட்டினாரா? பாராளுமன்றத் தெரிவும் ஓர் "கள்ள மார்க்கட்டு" வியாபாரமா? ஆகையினால் தலைகூர்ந்து தமிழர்களாகிய எங்களை எல்லாரிடத்தும் அபிமானம்கொண்டு யாவரும் ஒருமித்து பின்வருங் கருமங்களில் முயற்சி செய்யவேண்டும்.

(1) கட்சிபேதமின்றி எல்லா அபேட்சகர்களும் ஒற்றுமைப்படுதல்.

(2) தமிழ்ச் சாகியத்தாருக்குச் செய்ய இருக்கின்ற இவைஇவை என எழுத்தில் அறிவித்தல்.

(3) அவைகளுக்காகப் பாடுபடுவேனவாகும்.

நாங்கள் முதலில் எமக்கிடையே வேற்றுமை கொண்டால் எங்கள் சமூகம் எவ்விதமான நன்மையுமடையா. இன்னும் 15 நாட்கள்தான் இருக்கின்றன. கூடிய சீக்கிரத்தில் ஓர் முடிவுக்கு வந்து தமிழர்க்கு ஓர் பெருந் நன்மையையும் இதரசாதியினர்க்கு ஓர் உதாரணமாக இருந்து பொன்றுப்பெறும்படி...

இங்ஙனம்
நன்மை விரும்பி

# திருச்சி ரேடியோ

புதன் யூலை 16

காலை 7.15 கீதாரம்பம் 7-20 செய்திகள் 7-30 காஞ்சீபுரம் ஜி சக்கரபாணி செட்டியார் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்கள் 8-15 நால்வகை இசைத்தட்டு 8 30 டி எஸ லோகநாதன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி எஸ் லோகநாதன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 டி எஸ்லோகநாதன் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு

மாலை 5 வாளாடி எம் ருக்மிணி புல்லாங்குழல் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 பெஹர் நாடகம் 7-15 சித்ரகானம் 7-30 தமிழில்செய்திகள் 7-45 ரேடியோ வாத்ய கோஷ்டி 8 காஞ்சீபுரம் ஜி சாரங்கபாணி செட்டியார் பாட்டு 8-30 வாளாடி எம் ருக்மணி புல்லாங்குழல் 9 ஆங்கிலத்தில் செய்கள் 9.15 அணு சகாப்தம் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் 9-45 ஐரோப்பிய சங்கீதம் இசைத்தட்டு 10-30 முடிவு.

வியாழன் யூலை 17

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7- 0 வி என் கிருஷ்ண மூர்த்தி வீணை 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 குழலிசை இசைத்தட்டு 8-30 தென்காசி பி கே ராஜம்மா பாட்டு 9 முடிவு

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் -40 டி ஆர் பெருமாள் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 டி ஆர் பெருமாள் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 தென்காசி பி கே ராஜம்மா பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-.0 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7-15 செய்தி விளக்கம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 சிதம்பரம் எஸ் ஜயராம் பிள்ளை பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9- 5 சாந்தா ஆப்தே இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9-45 வி எஸ் கிருஷ்ணமூர்த்திஐயர் வீணை 10-30 முடிவு

வெளி யூன் 18

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 டி கே லட்சுமணன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருச்சி வாத்யகோஷ்டி 8 30 எஸ் சைலப்ப ஓதுவார் பாட்டு 9 முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி கே லட்சுமணன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 டி கே லக்ஷ்மணன் பாட்டு 2.15 கல்விஒலிபரப்பு 2 45 முடிவு

மாலை 5 கோயமுத்தூர் வி ராசலட்சுமி பாட்டு 5 30 குரான்ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 கோயமுத்தூர் வி ராசலட்சுமி பாட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 அன்னியர் தொடர்பு வேண்டுமோ? 8 பி எஸ் வீருசாமிப் பிள்ளை நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 வசுந்தரா இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 எஸ் பாலகிருஷ்ணன் வியோலா 10 நீங்கள் கேட்டவை 10-30 முடிவு.

## கல்கத்தாவில் மணிவாசகர் தினம்

சர்வசித்து வருஷம் ஆனி மாதம் 9-ந் திகதி (23-6-47) இரவு கல்கத்தா சக்திவேல் திருப்புகழ் மந்திரத்தில் திருப்புகழ் பஜனை நடந்தது. அன்று திருவாசகத்தைத் திருவாய் மலர்ந்தருளிய சைவசமயகுரவர் ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகள் திருஅவதார தினமாதலின் மேற்படி மந்திரத்திலே ஸ்ரீமான் N. சிங்காரம் அவர்கள் திருவாசகத்தைப் பண்ணோடு ஓதி அந்த அன்பரது பத்தியையும் வரலாற்றையும் இனிய ஒரு சொற்பொழிவில் விளக்கினார். மங்கள ஆரத்தியோடு பக்தர்கள் கூட்டம் இனிது முடிந்தது என்று ஷை திருப்புகழ் மந்திரக் காரியதரிசி திருப்புகள் அடியை T. R. S. மணிஐயர் தெரிவிக்கிறார்.

## நெருக்கடியான காலம் வர இருக்கிறதாம்

போல்ஷெவிக்லெனின் கட்சியின் தலைவரான டக்ரர் கொல்வின் ஆர். டி சில்வா சென்றவாரம் மாத்தறை இளைஞர் சங்கக் கூட்டத்திற் பேசும்போது இலங்கையில் வெகுசீக்கிரத்தில் வரவிருக்கும் பொருளாதார நெருக்கடி பற்றிக் குறிப்பிட்டார். தெங்குப் பொருள் விலையும் ரபர் விலையும் எவ்வளவோ குறைந்துவிட்டன. அரசாங்கம் எந்தவிதமான உதவிகளைச் செய்தபோதிலும், அத் தொழில்கள் இனித் தலையெடுக்க முடியாதென்றும், எதிர்சென்ற தேயிலையின்விலை இப்போது மிகவும் கீழ்நோக்கி வந்துவிட்டதென்றும் டக்ரர் சில்வா குறிப்பிட்டார்.

நடுத்தர வகுப்பினர் எனப்படும் மக்கள் படுங் கஷ்டங்களை அவர் குறிப்பிடுகையில், அவர்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டபோதிலும் போலிவேஷம் தரிக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் என்றும், அவர்களுடைய எதிர்காலம் மிகவும் இருளடைந்திருப்பதால் அவர்கள் சாவதானமாக விழிப்புடன் இருக்கவேண்டுமென்றுங் குறிப்பிட்டார்.

## பிரியாவிடை

தீவுப்பகுதியைச் சேர்ந்த நெடுந்தீவு கிராமாதிகாரி உத்தியோக மாற்றமாக பூனகரி, துணுக்காய், செல்வநை மூன்னிட்டு சென்ற 26 6.47 மாலை ஆறுமணியளவில் ஊர்காவற்றுறை அரசாங்க உத்தியோகத்தரின் கிளப்பின் சார்பால் ஓர் பிரியாவிடைக் கூட்டமும், விருந்தும் நடைபெற்றன. தீவுப்பகுதிக் காரியாதிகாரி H. E பிள்ளைநாயகம் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமைவகித்தார். பின்னர் ஊர்காவற்றுறை மாஜிஸ்ரேட்கோட் பிரதம கிளார்க் திரு சவுரிமுத்து அவர்கள் பிரிந்துசெல்லும் நெடுந்தீவு கிராமாதிகாரி அவர்களின் குணாதிசயங்களைப் பற்றியும், உத்தியோக கடமையில் அவர் காட்டிய திறமையைப் பற்றியும், பொதுமக்களிடையே அவர் காட்டிய அன்பையும், அனுதாபத்தையும் கூறினார்.

அடுத்தாற்போல் கழகக் காரியதரிசி திரு. மில்ஸ, அவர்கள் பிரிந்துசெல்பவரின் குணாதிசயங்களையும், அவர் பொதுசனங்களிடையே நடந்துகொண்ட முனமாதிரியையும், சப்ததீபங்களிடையே முதன் முதலாக கிராமாதிகாரி என்னும் பதவியைப் பெற்ற பெரும் பாக்கியத்தையுடையவரென்றும், இஃது சப்ததீவுகளின் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய விஷயங்களில் ஒன்று என்றும் கூறினார், —கடிதம்

## விளம்பரம்

வடமாகாணம் யாழ்ப்பாணப் பூனகரி-துணுக்காய்ப் பகுதியிலுள்ள முறிகண்டி குளத்திலுள்ள மண் கட்டுயர்த்துதல் முதலிய வேலைகள் செய்வதற்கு, வடமாகாண ஏசண்டரவர்கள் 1947-ம் ஆண்டு ஜூலை (ஆடி) மாதம் 15-ந் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணி வரைக்கும் நிரப்பப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வார். குறித்த விண்ணப்பப் பத்திரங்களை, ரூபாய் 50(ஐம்பது) கச்சேரியில் கட்டி வடமாகாண ஏசண்டரின் கையொப்பமிடப்பட்ட ஒவ்வொரு பற்றுச்சீட்டுக்கும் ஒவ்வொரு விண்ணப்பப் பத்திரமாக - டெண்டர் - 1947-ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ந் திகதி பகல் 12 மணிக்குள் பெற்றுக்கொள்ளவேண்டும்.

மறு விபரங்களை வடமாகாண ஏசண்டரவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

G 62 1', 15-7-47

## கொழும்பு விவேகானந்த சபை

கொழும்பு விவேகானந்தசபையின் சார்பில், ஆனி மாதம் 22-ந் திகதி (6-7-47) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில், தென்னிந்திய சிவநேயர் திருக்கூட்டப் பிரசாரகர் பண்டிதர் திரு. தா முருகேசபிள்ளை அவர்கள் "கடவுளும் கடமையும்" என்னும் பொருள்பற்றி ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார். அத்தருணம் டக்டர் த நல்லைநாதன் அவர்கள் தலைமை வகித்தனர். பண்டிதர் அவர்கள், கடவுளின் தன்மையையும், தனிப்பெருஞ் சிறப்பையும், சைவ சித்தாந்தக் கொள்கையின்படி மிகவும் தெளிவாக எடுத்துக் கூறினார். தேவார திருவாசக மணிகளையே மேற்கோளாக எடுத்து, அவற்றை மிகவும் இனிமையாகப் பாடி சபையிலுள்ளோரை மிகவும் மகிழ வைத்தார். கூட்டத்தில் சமுகமளித்தவர்களின் வேண்டுகோளுக் கிணங்கி, பண்டிதர் அவர்கள், ஆனி மாதம் 29-ந் திகதி (13-7-47) ஞாயிற்றுக்கிழமை இவ்விஷயத்தையே தொடர்பாகப் பேசுவதற்குச் சம்மதித்துள்ளார். —கடிதம்

## விளம்பரம்

கிருஷிக இலாக்கா மாட்டுப்பண்ணையில் காட்டு மரங்கள் அரிவதற்கு விரும்பியவர்கள் தங்கள் விண்ணப்பப் பத்திரங்களை இதன்கீழ் கையொப்பமிட்டிருப்பவரின் கந்தோருக்கு 1947ம் ஆண்டு ஆடிமாதம் 25ம் திகதி மத்தியானம் 12 மணிக்குள்ளாக அனுப்பப்படவேண்டும். உங்கள் விண்ணப்பம் அனுப்பும்பத்திரங்களில் உங்கள் கேள்விகளை விபரமாக எழுதல் வேண்டும்.

மரங்களை வெட்டி விழுத்தவும், ஏற்றிக்கொண்டுபோய் மரம் அரியுமிடத்தில் பறிக்கவும், ஒரு சதுர அடி அரியவும், வைரமுள்ள மரங்கள் அரியவும், வைரமில்லாத மரங்கள் அரியவும் வெவ்வேறாக விபரம் கொடுக்கப்படவேண்டும்.

பத்துரூபாய்க்கு கச்சேரி அல்லது ரெசிப்ட் ரசீட் ஒன்று இக்கந்தோருக்கு அனுப்பி விண்ணப்பம் நிரப்பி அனுப்பும்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

முழு விபரங்களுக்கு 1947ம் ஆண்டு ஆடிமாதம்...ம் திகதி வெளிவரும் அரசாங்க கசேட்டை பார்க்கவும்.

என். கே. துரைசிங்கம்,
வடபகுதி கிருஷிகத் தலைவர்.

கிளிநொச்சி 28-6.47.
G 63 15, 18 7-47.

## தமிழ் ஆசிரிய தராதரப்பத்திரப் பரீட்சை

ஆசிரியர் பேதருகல்லூரி
ஆசிரியர்களால் வகுக்கப்பட்ட
பாடத்திட்டம்

முதலாம் அல்லது இரண்டாம் பகுதி
முதலாம் பாடம் ரூபா 7 50
அடுத்தஒவ்வொருபாடத்துக்கும் 5 00

அற்லஸ் ஹால்
தபாற் பெட்டி இல. 649
கொழும்பு

Std 19 15-7 — 25-8-47 (செ)

இலங்கை உள்நாட்டு மந்திரி ஸ்ரீ அ. மகாதேவா அவர்களின் புதல்வரும், லண்டனில் இலங்கை அரசாங்கப் பிரதிநிதியின் காரியதரிசியுமான ஸ்ரீ பீ. மகாதேவா, ஐக்கியதேச ஸ்தாபனத்தின் ஆதரவில் நிகழும் வர்த்தகமகாநாட்டில் இலங்கைப்பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.


## சென்னையிலிருந்து கப்பல் பிரயாணம்

### மலேயாவுக்கு உங்கள் பிரயாணம் நிச்சயமா ?

எம்மால் சென்ற சில மாசங்களாக நாகபட்டணம் மார்க்கம் ஏற்பாடாகியிருந்த பிரயாண வசதிகள் கப்பல்வரை திருப்திகரமாயிருந்தும் கப்பலில் வசதியீனங்களை யுணர்ந்து எமது நண்பர்கள் சௌகரியத்துடன் குடும்ப சமேதராகப் பிரயாணஞ் செய்வதற்கு ஏற்ற வசதிகளடங்கிய கப்பல் மாசம் ஒருமுறை சென்னையிலிருந்து புறப்படுவதற்கேற்ற ஒழுங்குகள் கைகூடுவதை அறியத்தருவதுடன் எம்மிடம் எந்த நேரங்களிலும் விபரம் பெறுதற்கேற்ப ஓர்காரியாலயம் ஸ்ரான்லிறேட்டில் நிறுவப்பட்டிருக்கிறது.

முன்போல் நாகபட்டணம் மார்க்கமும் வசதிகள் செய்யப்படும்

எஸ். ஆர். எஸ். நாதன்
21/3, ஸ்ரான்லி றேட் யாழ்ப்பாணம்

Std 23, 6-6-47—6-6-48


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவிளையாட்டுப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க் கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளிபிடப்பட்டுள்ளன.

ஆசையங் கரிகடம்மை யங்கைகோண் டொன்றோ டொன்று
பூசல்செய் விக்கும் வானிற் போந்திடுங் கங்கை நீராற்
காய்சின வடவை மாற்றுங் கவின்சிறைக் கலுழ னோடு
வாசுகி தன்னைப் பற்றி மாறிகல் விளைக்கு மன்றே.

திக்கு யானைகளை அழகிய தும்பிக்கையினால் ஒன்றுடனொன்று சண்டையிடும்படி தூண்டிவிடுவார்; ஆகாய கங்கையின் நீரினால் சொல்லுகின்ற சீற்றத்தோடு கூடியதாகிய வடவாமுகாக்கினியைத் தணியச்செய்வார்; அழகிய சிறகுகளையுடைய கருடனுடன் ஆதிசேடனையும் பிடித்து நிகரற்ற சண்டை செய்விப்பார் (முருகக்கடவுள்) என்பது கருத்து.

மேலேயுள்ள திருவிருத்தத்தில் வந்துள்ள 'குமாரவள்ளல்'' என்பதையே இதற்கும் கீழ்வரும் திருவிருத்தங்கட்கும் எழுவாயாகக்கொள்க. மாற்றும், விளைக்கும் என்னும் வினைகளைச் செய்விக்கும் என்பதுபோற் பிறவினைகளாக்கிப் பொருள் கொள்ளப்பட்டது; உலக சங்காரத்திற்குத் துணையாகவுள்ளதும் பெருவெப்பத்தோடு கூடியதுமான வடவையாதலின், 'காய்சின வடவை'' என்றார்; திருமாலின் வாகனமாதலின் ''கவின்சிறைக் கலுழன்'' எனப்பட்டது; மாறல்-யுத்தஞ்செய்யும் ஊக்கத்தில் ஒன்றைக் காட்டிலும் ஒன்று குறைவில்லாத: முருகமூர்த்தி உலகத்திலே நிகழக்கூடியனவென எவரும் எண்ணமுடியாத அசம்பாவிதமான கருமங்களைச் செய்தாரென இப்புராணத்திற் சொல்லப்பட்டிருக்கின்றதே, இஃதென்ன விபரீதமெனின், அறியாது கூறினாய் சகல அண்டங்களையும் புவனங்களையும் அவற்றின்கணுள்ள சராசரங்களையும் படைத்துக் காத்து அழித்தருளும் சர்வ வல்லமையுடைய சண்முகத் தெய்வத்திற்கு இவைகளெல்லாம் அருளின் செயலான ஒரு திருவிளையாட்டென வுணர்ந்து அடங்குக.

[ஒன்றோடொன்று (தாக்கவிட்டுப்) பூசல் செய்விக்கும்: இங்ஙனம் பொருள் கொள்ளுங்கால் அங்கையென்பதற்குச் சுப்பிரமணியக் கடவுளுடைய திருக்கரமெனக் கொள்க; காய் . கொல்லுகின்ற, வாசுகி - ஆதிசேடன்,] (25)

26-ம் திருவிருத்தத்தின் பொருள் வெளிப்படை; 27-ம் திருவிருத்தத்தில் ''மாலை'' என்பதற்கு இரத்தினமாலை எனப் பொருள்கொள்க.

வெய்யவர் மதிகோ ளேனோர் விண்படர் விமானந் தேர்கள்
மொய்யுறப் பிணித்த பாச முழுவதுந் துருவ னென்பான்
கையுறு மவற்றில் வேண்டுங் கயிற்றினை யிடைக்க ணீர்ந்து
வையகத் திசைமீச் செல்ல வாளியில் விடுக்கு மைந்தன்.

சூரியர்களும் சந்திரனும் ஏனைய வானசோதிகளும், அவர்கள் ஆகாய மார்க்கமாகச் செல்வதற்குரிய விமானம், தேர் ஆகிய இவைகளையும் திண்மையோடு பந்தித்துள்ள கயிறுகள் துருவனென்பவனுடைய கையிற் பொருந்தியுள்ளன. அக்கயிறுகளுள் தமக்கு வேண்டிய கயிறுகளை இடையே பற்றியரிந்து, பூமியிலும் திக்குகளிலும் ஆகாயத்திலும் போம்படி பட்டம்போலக் குமாரகடவுள விடுவார் என்பது கருத்து.

பன்னிரு சிறப்பு நாமங்கள் கொண்டு மாசமொவ்வொரு நாமத்தினால் வழங்கப்படுதலினாற்போலும் சூரியர் எனப் பன்மையிற் கூறினர், கோள் என்றது சந்திர சூரியரொழிந்த ஏழு கிரகங்களையும், ஏனோரென்றது நட்சத்திரங்களின் அதிதேவர்களை; சந்திரன் முதலிய இவ் வானசோதிகளுக்கும் சூரியன் முதலிய சோதிகட்கும் முறையே விமானம் தேர் என்னு மூர்திகளுண்டெனச் சொல்லப்படுதலால் ''விமானம் தேர்கள்'' என்றார், துருவன் - சுவாயம்பு மனுவின் புதல்வனாகிய உத்தானபாதனுடைய இரண்டாம் மனைவியாகிய சுநீதி பெற்ற புதல்வன்: உத்தானபாதனது பட்டத்தேவியின் பெயர் சுருதி: அவள் பெற்ற மகனுடைய பெயர் உத்தமன்; பெரிய தாயாகிய சுருதி இவனைப் புறக்கணித்தமையினால் இவன் சின்ன வயசிற்றானே காட்டிற்சென்று அருந்தவஞ் செய்து, நாள்கோளென்னு மிவைகளுக்கு மேலாகவிருக்கும் பதவியையும் அவற்றை இயக்கும் அதிகாரத்தையும் பெற்றானென்ப: துருவன் மூத்தாளுடைய மகனெனக் கந்தபுராண உரைப் பிரதியொன்றிற் சொல்லப்பட்டிருத்தல் பொருந்தாதென்க. துருவனுடைய வரலாற்றைக் காசி காண்டத்திற் பரக்கக் காண்க, கிரகங்கள் நட்சத்திரங்களின் கதி முதலியவற்றையறிதற்கு எல்லையாயிருப்பது துருவ நக்ஷத்திரமாதலின், துருவன் இவைகளைப் பிணித்த கயிற்றைப்பற்றித் தான் இயக்குகின்றானென்பது பௌராணிகர் வருணனை. வானி - வானிற் செல்வது; இக்காலத்திற் பட்டமென்றுங் கொடியென்றுஞ் சொல்லப்படும். (28)

வடுத்தவிர் விசும்பிற் செல்லும் வார்சிலை யிரண்டும் பற்றி
யுடுத்திரள் பலகோ ளின்ன வுண்டையாக் கொண்டு வானோர்
முடித்தலை யுரந்தோ ள் கண்ட முகம்படக் குறியா வெய்தே
யடற்றனு விஞ்சை காட்டு மாறிரு தடந்தோ ளண்ணல்,

விசாலித்த பன்னிரண்டு திருப்புயங்களையுடைய 'பெருமையிற் சிறந்த முருகக்கடவுள் களங்கமற்ற ஆகாயத்தின்கண்ணே தோன்றும் நீண்ட இரண்டு விற்களையும் பிடித்து, நக்ஷத்திரக் கூட்டங்களையும் பல கிரகங்களையும் இன்ன பிறவற்றையும் உருண்டையெனக் கொண்டு தேவர்களுடைய முடி தரித்த தலையிலும் மார்பிலும் புயங்களிலும் கழுத்திலும் முகத்திலும் போய்ப் படும்வண்ணம் இலக்குத் தவறாது எய்து, தமது வலிய வில்வித்தையின் திறமையைக் காட்டியருளுவரர் என்பது கருத்து.

சிலையிரண்டு மென்பதற்கு, இந்திர வில்லு, சந்திர வில்லு என இரண்டென்பர்; இந்திரவில் சூரியனுடைய ஒளி முகில் மண்டலத்திற் பிரதிவிம்பிப்பதாலும், சந்திரவில்லு சந்திரனுடைய ஒளி முகில் மண்டலத்திற் பிரதிவிம்பித்தலினாலும் உண்டாவன என்று அறிஞர் சொல்வர்; தோன்றியழின்றனவாகிய இந்த விற்களைக் கொண்டு பெருமான் திருவிளையாட்டியற்றல் எங்ஙனமோ எனில், பெருமானுடைய திருக்கரத்திற் பட்டமாத்திரத்திலே பிரதிவிம்பங்களாகிய இந்த விற்களுக்குத் திண்ணிய வடிவமும் அழியாத் தன்மையும் முருகனருளால் தாமே வந்தடையுமல்லவா எனச் சமாதானங் கூறுக. உண்டை - சுண்டுவில்லில் வைத்துப் பிரயோகிக்கும் உண்டை; மற்றைய சீவராசிகளெல்லாம் இருப்பத் தேவர்கண்மீது மாத்திரம் முருகவேள் இப்படி உண்டைகளைப் பிரயோகித்தற்குக் காரணமென்னையெனின், சூரபன்மன் முதலிய வரத்தாலும் வலியாலுஞ் சிறந்த அசுரர்களை இந்தப் பாலசுப்பிரமணியத் தெய்வம் வெல்லுமோ என்ற சந்தேகம் தேவர்களுள்ளத்திற் குடிகொண்டிருந்தமையினால், அச்சந்தேகத்தை நீக்கியருளுதற்கு முருகவேள் செய்த திருவிளையாட்டென்க. ஆறிரு தடந்தோளண்ணல் உண்டைகொண்டு எய்தபோது, அத்தேவர்கள் மாளாதொழிந்தமைக்கு ஏது என்னையெனின், ''அருள்கெழு குமார வள்ளல் ஆவிகட்கு ஊறின்றாக''த் திருவிளையாடல் செய்வாராயினரென முன்னர்ச் சொல்லப்பட்டிருத்தலினாலென்க.

[வார்சிலை யிரண்டும் – இரட்டை வில்லையும். இதனைப் பாரதத்தில் ''.... வந்திரட்டை வரிசிலையாற் பஞ்சவர்ண மகர தோரணமிட்டு....'' என்பதனைமறிக.] (29)

## மண்ணெண்ணெய்

### விநியோக அளவு அதிகரிக்கலாம்

இப்போது இலங்கையில் மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. மலேரியாப் பிரதேசங்களில், நுளம்புகளைக் கொல்வதற்காக டீ. டீ. ரீ. தெளிப்பதற்கு மண்ணெண்ணெய் மாதந்தோறும் 70,000 கலன் உபயோகிக்கப்படுகிறது. அதனால், பொதுஜன உபயோகத்துக்கு வேண்டிய அளவு மண்ணெண்ணெய் கிடைப்பதில்லை.

ஒக்டோபர் மாதம் தொடக்கம் டீ. டீ. ரீ. சேர்வை ஒன்றினை நுளம்பு நாசவேலைக்கு அரசாங்கம் உபயோகிக்கவிருக்கிறது. அந்தச் சேர்வையை உபயோகித்தால் மண்ணெண்ணெய் அந்த வேலைக்குத் தேவையில்லாது விடும். ஆகவே, மண்ணெண்ணெயினை போதிய அளவுக்கு ஊரவர்களுக்கு விநியோகிக்க அரசாங்கம் நிச்சயித்திருக்கிறது.

## அணுக்குண்டு இரகசியம்

### அம்பலமாய் விட்டதா?

அமெரிக்காவிலே தென்னெஸிப்பகுதியிலே அணுக்குண்டுசம்பந்தமான இரகசிய ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன அந்த ஆராய்ச்சி நிலையத்திலே வேலை செய்த சிலர், இரகசிய முறைகளை எல்லாம அறிந்து வேற்று அரசாங்கத்துக்கு அறிவித்துவிட்டனர் என்று பிரபல அமெரிக்க இராஜதந்திரிகள் கருதுகிறார்கள்.

இந்த ஆராய்ச்சிச் சாலையிலே வேலைசெய்யும் ஒருவனின் மனைவி, அமெரிக்காவில் ருஷிய ஸ்தானிகர் காரியாலயத்தில் வேலைசெய்கிறாளாம், தன் கணவன் மூலமாகப் பல இரகசியங்களை அவள் அறிந்து ருஷியாவுக்கு அறிவித்திருக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது.

## தேர்தல் தினம் மாற்றியமைக்க

கோப்பாய்த் தொகுதிக்கான தேர்தல் செப்டெம்பர் மாதம் 1ந் திகதிக்கென நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அன்றைய தினம் நல்லூர்க்கந்தசுவாமி கோயில் மஞ்சத் திருவிழா நடக்கவிருப்பதாலும், கோப்பாய்த் தொகுதியில் உள்ள மக்களிற் பெரும்பாலோா அத்திருவிழாவுக்குப் போவார்களாதலாலும், தேர்தல் தினத்தை முதல்நாள் ஆகஸடு மாதம் 30-ந்திகதிக்கு அலலது அடுத்தநாள் செப்டெம்பர்மாதம் 2-ந்திகதிக்கு மாற்றிவைக்கும்படி மேற்படிதொகுதி அபேட்சகராக முன்வந்துள்ள நியாயவாதி ஸ்ரீ சு. இராசரத்தினம் அவர்கள்தேர்தல் அதிகாரியைக் கேட்டிருக்கிறார்.

பிரெஞ்சிந்தியாவின் மேயர் ஸ்ரீ சேமுத்துஸ்வாமி கொழும்புக்கு விஜயஞ் செய்திருக்கிறார். பிரான்சிய சாம்ராஜ்யத்துக்குள், பிரெஞ்சிந்தியாவுக்கு 1948-ம் ஆண்டு முடிவதற் கிடையில் பரிபூரணமான சுயராச்சியம் கிடைத்துவிடுமென்று அவர் ஓர் பத்திரிகை நிருபருக்குக் கூறினார்.

## முதல் ஆக்கிரமிப்பு?

### இந்தியாவிலே நிஸாமின் ஆயத்தம்

இந்தியாவின் மத்திய மாகாணத்தைச் சேர்ந்த பீரார்ப்பகுதி இப்போது ஹைதராபாத் நிஸாமின் செல்வாக்கில் இருக்கிறது. ஆகஸடு மாதம் 15-ம் திகதிக்குப் பின், இந்த பீரார்ப் பகுதி நிசாமின் சமஸ்தானத்தை விட்டுவிலகவேண்டுமென்ற கிளர்ச்சி பேலமாக இருக்கிறது இந்தக் கிளர்ச்சியைத் தடுக்க, நிஸாம் இப்போது பலவித ஏற்பாடுகளும் செய்து வருகிறாராம். ஆகஸடு மாதம் 16-ம் திகதிக்கும் 20-ம் திகதிக்கு மிடையில், நிஸாம் பீரார் மாகாணத்தின்மீது படையெடுத்து அந்தப் பிரதேசத்தைத் தம் சமஸ்தானத்துடன் பலவந்தமாகச் சேர்க்க முயற்சி செய்கிறார் என்று கல்கத்தாஅமிர்தபஸார் பத்திரிகையின் விசேஷ நிருபர் தெரிவிக்கிறார். இந்த ஆக்கிரமிப்புக்கு, பீகாரில் உள்ள தாழ்த்தப்பட்டவர்களும் உதவி செய்வராம்.

## வங்காளக் கலகம்

### தீவிரமாக அடக்கப்படும்

வங்காளத்திலே கல்கத்தா நகரத்தில் காடையர் கொட்டத்தை அடக்கி, வகுப்புக் கலகத்தை ஒழிக்க, இப்போது நியமிக்கப்பட்ட மேற்கு வங்க மந்திரசபை தீர்மானித்துவிட்டது. இனியும் இதுவரை பரிபாலித்து வந்த ஷுஹ்ராவர்த்தியின் தயவில் தங்கியிருக்கக் கூடாது என்று மேற்கு வங்கப் பிரதமர் ஸ்ரீ ஜுஷ் பீ. ஸீ கோஷ், வெகு துரிதமாகக் கருமம் ஆற்றி வருகிறார். கல்கத்தாவில் பொலிஸ் அதிகாரியாக விருந்த ஓர் முஸ்லிம் இப்போது தம் பதவியினின்றும் நீக்கப்பட்டிருக்கிறார். அவரிடத்துக்கு ஓர் ஐரோப்பியர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்த ஐரோப்பியர் இப்படியான கலகங்களை அடக்குவதிற் பிரசித்தி பெற்றவராம்

## குறிப்புக்கள்

### 2-ம் பக்கத் தொடர்ச்சி

மனோபாவம் சர்வாதிகாரத்துவத்தை ஆதாரமாகக் கொண்டது. ஜனநாயகத்துக்கு முற்றிலும் மாறானது. இத்தகைய கொள்கையினை அவர் கடைசிவரை கைக்கொண்டமையினால்தான் அவர் ஈற்றில் பதவியிழந்து இன்று அஞ்ஞாதவாசம் செய்யவேண்டியேற்பட்டது, இந்த இலங்கையிலும், அரசியல் வாதிகள் என முற்படுவோர் சிலர் இத்தகைய மனோபாவத்தைக் கொண்டிருப்பது இந்நாட்டின் வருங்காலசுபீட்சத்திற்குநல்லஉற்பாதமாக இருக்கவில்லைஎன்பதைநாம் வருத்தத்துடன் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. பெரிய நாடுகளிலும் சரி, சின்னஞ்சிறிய இலங்கை போன்ற நாடுகளிலும் சரி, சர்வாதிகார முறை தலைகாட்டுமானால், அது சர்வ நாசத்துக்கே வழிகோலும் என்பதை அரசியல்வாதிகள் இப்போதுதானும் உணர்ந்து உண்மையான ஜனநாயகமுறையைப் பேச்சிலும், செயலிலும் கைக்கொண்டு சமாதானம். சமரசம் என்பவற்றை விருத்திசெய்ய உழைப்பாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புநெறி

1-ம் பக்கத் தொடர்ச்சி

கலாமா? தவஞ்செய்தலும் தியானத் தமர்தலும், கோயிற்பணி செய்தலும் மிக மேன்மையான அவசியமான செயல்களேயாம்; பசியும் பிணியும் சண்டையும் மலிந்துள்ள இந்நாளில் அவைகளைச் செய்யும் வசதியும் அவகாசமும் திறமையும் பெற்றுள்ளவர் எத்தனைபேர்? வயிறு காயும்போது வேதாந்தம் பயன்படாது; தமோ குணத்திலமிழ்ந்துள்ள நம்மிற் பெரும்பாலார்க்குத் தியானமும் தவமும் பூஜையும் தகுதியுள்ளவையாகா. நமது குடும்பத்தாராகிய சமகத்தார்க்குச் செய்யவேண்டிய கடமைகளை அறிந்து செய்தலே நமக்கு ஏற்ற தருமநெறியாகும். நமதுதாய்நாடும் அதன் கல்விச் செல்வமும் ஞானச் செல்வமும் நமது பழமையான சனசமூகத்தின் உயர்வுள்ள மனப்பான்மையும் இலக்ஷியங்களும் சம்பிரதாயங்களும் நமதுமுன்னோர் நமக்கெனத் திரட்டி வைத்த ஒப்பரிய காணியாகும், இக்காணியை இழக்காது பாதுகாத்தல் நமது பொறுப்பாகும். அக்காணியை ஒன்று பத்தாகப் பெருக்கி நமது சந்ததியார்க்கு அளித்தலும் கடமையாகும்: நமது முன்னோர்க்குச் செலுத்தவேண்டிய கடன் இது என்பதை உணர்தல்வேண்டும். சுருங்கச் சொல்லின் நமது சமூகத்திற்கு சேவைபுரிதலையே நமது ஞான சாதனமாக்க வேண்டும். இதன்மூலமாகவே நமக்கும் ஈசனுக்குமுரிய கடமைகளை நாம் இயற்றல்வேண்டும்தியானத்தையும் ஈசனது வழிபாட்டையும் கைவிடுதல் நம்மை உலகச் சேற்றில் அழுந்தச் செய்யும்;ஆதலின் அவைகளை வேறு வகையில்வற்புறுத்தல் அவசியமாகின்றது கணக்கற்றக்ஷேத்திரங்களும்தீர்த்தங்களும் அடங்கியுள்ள நமது பாரத நாட்டையே கோயிலாகக் கருதி, எல்லாவகைப் பணிகளையும் இயன்ற மட்டும் இக்கோயிலிலே செய்தல் வேண்டும்; நமது நாட்டு மக்களை ஈசனது வடிவங்களாகத் தியானித்தல் வேண்டும் எவ்வுயிரும் பராபரனது சந்நிதியாகும்; உயிர்களனைத்தும் ஈசனது கோயில்களே-என்றனர் நமது நாட்டுப் பெரியார். இக்கோயில்களில் ஸேவை செய்தலே தற்காலத்திற்கு உரிய தவம், ஸமூகமக்களின்மீதுள்ள அன்பெனும் தூய அக்கினியை வளர்த்து, அதில் தன்னல இச்சையை ஓமஞ்செய்தலே தற்காலத்திற்குரிய யாகம். இந்தயாகமே நமக்கு இகபர நன்மைகள் எல்லாவற்றையும் தரும். இதுவே தற்கால மாஞானியர் தெய்வீகக்காட்சியால் கண்டு போதிக்கும் தொண்டு நெறி (கைங்கர்யமார்க்கம்) ஆகும்.

—வரும்.


## தேவை

சகல விதமான நகை வேலைகளிலுந் தேர்ச்சி பெற்ற பத்தர்மார்கள் மாதச் சம்பளமாகவோ கம்மிஷனுகவோ வேலை செய்ய விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்குத் தங்கள் தங்கள் முக்கிய அனுபவமான வேலைகளைப்பற்றிய தகவல்களுடன் எழுதவும். 45 வயசுக்கு மேற்பட்டவர்கள் தேவையில்லை. தேவைப்பட்டவர்களுக்கு வருவதற்குரிய பேமிற் அனுப்பலாம்.

நேதாஜி டயமெண்ட் கம்பெனி
162 ஈப்போ ரோட்
செண்டுல்
கோலாலம்பூர்.
தந்தி: "நேதாஜி" கோலாலம்பூர்
Mis 77 7-7-47 to 5-8-47.

## விளம்பரம்

கிளிநொச்சிக் கலனிக் குடியேற்றத்தில் வீடுகள் கட்டும் இடங்களில் ஏறக்குறைய 6000 புசல் சூளைச் சுண்ணும்பு கொடுப்பதற்கு 1947-ம் ஆண்டு ஜூலை மாதம் 29-ந் திகதி 12 மணி வரைக்கும், கொழும்புத் திறைசேரியில் றெண்டர் போட் சேர்மன் அவர்கள் றெண்டர் ஏற்றுக் கொள்வார்கள். றெண்டர் ரூபாய் 100 பணங்கட்டி வடமாகாண ஏஜண்டரிடம், 26-7.1947க்கு முன், பெற்றுக் கொண்ட போம்களில் எழுதப்படவேண்டும். மறு விபரங்களை அவரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

G 61 8, 11, 15-7-47

## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப்பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருரூத்தல் விலை ரூபா 25
அரைரூத்தலுக்கு ரூபா 12-50
கால்ரூத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
கி. 156, செக்கடித்தெரு கொழும்பு
Std. 1: 26—3—47 to , 1—4—48

## கந்தசாமி வைத்தியர் அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீவகும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற் களஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

**கால் ரூத்தல் விலை ரூபா 5-00**

வி. பீ. பி யில் அனுப்புவோம்.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை
Std 25 1-7-47—30-6-48 (செ)

## விளம்பரம்

யாழ்ப்பாணம் பெரியதெருவில், அநுமதிபெற்றுப் பல்வைத்தியம், சண் வைத்தியம் செய்துவரும் நான், பழையபடி இரு வைத்தியங்களையும் தொடங்கி நல்லமுறையில் நடத்திவருகிறேனென்பதையும், கட்டிவைக்குரிய கண்ணுடி முதலிய பொருள்களையும், செய்கைப்பல், செயற்கைக்கண் முதலிய பொருள்களையும் இப்பொழுது போதிய அளவு தருவித்திருக்கிறேனென்பதையும் இந்த வடமாகாணத்துள்ள மக்களுக்குத் தெரிவிப்பதோடு, என்னை அபிமானிக்கும்படியும் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

| | | |
|---|---|---|
| யோசித்தற்குரிய நேரம் | காலை 9 மணிதொடக்கம் | 12 வரை |
| நாள்தோறும் | மாலை 2 ,, | 5 ,, |

Tst 28 11-7—10-10-47. S. சர்ல்ஸ்பத்திராஜு.

# இந்துசாதனம்

## ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். | வெளியூர். | மலாய்நாட்டுக்கு |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ ச. | ரூ. ச |
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மனேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்.

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும், தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறப்பர்.

Std. 14 20-11-46—20-11-47 (தி)

## இப்பொழுது எங்கள் கைவசமுள்ளன!

| | |
|---|---|
| சுத்தமான "பிறேக்" எண்ணெய் | டுக்கோ பிறே வர்ணங்கள் |
| ஸிமோனிஸ் பொலிஷ் | "சைக்கிள் கள் |
| ஹோர்-பல்ப்ஸ் | சைக்கிள்களிற் தேவையான தனிப்பொருள்கள் |
| குட்ஸ்யர் வான்-பெல்ற்ஸ (FanBelts) | றேடியோக்கள் |
| மின்சாரப் பொருள்கள் | ரயர் ரியூப்கள் |

**T. N. லிங்கம் & ஸன்,**

எவ்வகையான மோட்டார் வண்டிகளுக்கும் சைக்கிள்களுக்கும் தேவையான பொருள்களும் தனிப் பொருள்களும் கொடுப்பவர்கள்; மின்சாரப் பகுதிக் கன்றுக்ரர்கள்.

தெலிவோன் இல. 108.
248, K. K. S யாழ்ப்பாணம்.
19-6-47 Std 23 24-6-47—22-7-47.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai. Jaffna. on Tuesday, July, 15, 1947,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org